செ.வெ.எண்: 125 நாள்: 8/02/11

<u>பொது (தேர்தல்கள்–2) துறை</u>

## பத்திரிக்கை செய்தி

விடுபட்ட வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்க சிறப்பு முகாம் 12.02.2011 அன்று நடத்தப்பட உள்ளது. 2010 ஆண்டிலும் அண்மையில் முடிவடைந்த 2011க்கான வாக்காளர் திருத்தத்தின் போதும் வாக்காளர்களாகப் புதிவு செய்து கொண்டு அடையாள அட்டை பெறாதவர்கள் மேற்படி முகாமில் வாக்காளர் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. இவ்வாறு விடுபட்டவர்களுக்கும் ஊரகப் பகுதிகளில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களிலும் நகர் பகுதிகளில் நகராட்சி அலுவலகங்களிலும் மாநகராட்சி மண்டல அலுவலகங்களிலும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படும்.

3. இது வரை வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பெறாத தகுதியுள்ள வாக்காளர் அனைவரும், இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி அடையாள அட்டையை தவறாமல் பெற்றுக் கொள்ளலாம்.

4. பெரும்பாலான வாக்காளர்கள் தங்களது அசல் அடையாள அட்டை காணாமல் போனதாக குறிப்பிட்டு, அதன் நகல் அட்டை வழங்குமாறு கோரியுள்ளனர். இதற்கான விண்ணப்பங்களைப் பெற 19.02.2011 மற்றும 20.02.2011 தேதிகளில் சிறப்பு முகாம் ஒன்று நடத்தப்பட உள்ளது. ஊரகப் பகுதிகளில் (வருவாய் உள்வட்ட) பிர்க்கா அளவிலும் நகர்பகுதிகளில், நகராட்சிகள், மாநகராட்சிகளின் மண்டல அலுவலகங்களில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களிலும் இம் முகாம் நடைபெறும். ஊரகப்பகுதிகளில் வருவாய் அலுவலரும், நகர் பகுதிகளில் நகராட்சி / மாநகராட்சி மண்டல அலுவலகங்களிள் மேலாளர்களும். இவ்விண்ணப்பங்களை பெறுவதற்கான நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

விண்ணப்பங்களை படிவம் 001Cஇல் உள்ளவாறு அளித்து ரூ.15/– கட்டணத்தை செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. அசல் வாக்காளர் அடையாள அட்டை தொலைந்து போனதால் புதிய அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்கள் இருப்பிட முகவரிச்சான்று அடையாளச் சான்றுடன் நிர்ணயிக்கப்பட்ட இடத்துக்கு நேரில் வர வேண்டும்: உணவு வழங்கல் அட்டை, பாஸ் போர்ட், ஓட்டுநர் உரிமம், புகைப்படத்துடன் கூடிய வங்கி / அஞ்சலக கணக்கு புத்தகம் ஆகியவற்றின் நகல்கள், இருப்பிட முகவரிச் சான்றுகளாக ஏற்றுக்கொள்ளப்படும். இருப்பிட முகவரி சான்றுக்கு படிவம் 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியும் ஏற்றுக் கொள்ளப்படும். மாணவர் அடையாள அட்டை, வருமான வரி கணக்கு எண் அட்டை, அரசின் அடையாள அட்டை போன்றவையும் அடையாளச் சான்றாக ஏற்கப்படும்.

6. மற்ற நாட்களில் புதிய அடையாள அட்டை கோரி விண்ணப்பிக்கும் வாக்காளர்கள் சட்டமன்ற தொகுதி அளவிலான வாக்காளர் அடையாள அட்டை மையங்களான, மாவட்டங்களில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களிலும் சென்னையில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகங்களிலும், இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவங்கள் வட்டாட்சியர் அலுவலகங்களில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மண்டல அலுவலகங்களில் மேலாளர் ஆகியோரால் பெற்றுக் கொள்ளப்படும் மேற்படி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு விண்ணப்பம் பெறப்பட்ட 2 வாரங்களுக்குள் புதிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படும்.

*தலைமைத் தேர்தல் அதிகாரி*

2/2

**வெளியீடு, இயக்குநர்**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை -9**